

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதையொட்டி நேற்று முன்தினம் (27.8.2024) சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ரெட்டணையில் நடைபெற்ற தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய பெருந்தலைவர்கள் யோகேஸ்வரிமணிமாறன், அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள

# மீனவர்களையும் - மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்வீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக. 29 - இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 8 மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று முன்தினம் (27.08.2024) எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், INDTN10MM34 என்ற பதிவெண் கொண்ட இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 8 இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் 26.08.2024 அன்று கைது செய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டுள்ளதோடு, தற்போது 116 இந்திய மீனவர்களும், 184 படகுகளும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் இதுபோன்று தொடர்ச்சியாக கைது செய்யப்படும் சம்பவங்கள், மீனவர்களின் குடும்பத்தினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதோடு, இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்களின் வாழ்வாதாரம் கடற்பரப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது தாகவும், இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவர்களை மட்டும் மல்லாமல், அவர்களை நம்பி வாழும் அவர்களது குடும்பத்தினரின் நல்வாழ்வையும் பாதிப்பதாக தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், இந்திய படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அமைச்சர் எஸ் ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன்- கவிச்சுடர் கவிதைப் பித்தன் சிறப்புரை!

# புதுக்கோட்டை மாநகர பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பெரியண்ணன் அரசு - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! ஆ.செந்தில் வரவேற்புரை!

புதுக்கோட்டை, ஆக.29- புதுக்கோட்டை மாநகர பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் மாநகர அவைத் தலைவர் அ. ரெத்தினம் தலைமையில் புதுக்கோட்டை ஜியோ பார்க் ஓட்டலில் 25.08.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநகர செயலாளர் ஆ.செந்தில் அனைவரையும் வரவேற்று சிறப்புரையாற்றினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும் சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, மாவட்ட அவைத் தலைவர் அரு. வீரமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ். கருப்பையா, பி. ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர் துணை மேயர் எம். லியாகத் அலி, மேயர் திலகவதி செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, மாநகர துணைச் செயலாளர்கள் மா.மணிவேலன், முத்தழகு பழனிவேலு, பா.ரெங்கராஜ், மாநகர பொருளாளர் சேட் (எ) ஷஜஹான், தவ .பாஞ்சாலன், எம்.எம். பாலு, மணிமொழி மனோகரன், செந்தாமரை பாலு, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், அரங்கநாயகம், கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துசாமி, இராம.செல்வராஜ், வை.நடராஜன், தெய்வானை, இதயம் அப்துல்லா, எம்.கே.அறிவுடைநம்பி, சி.மதியழகன், டி.அப்புக் காளை, கனகம்மன் பாபு, பால்ராஜ், ரவீஸ் ரவி, வி.ஏ.டி.சி. ராஜேந்திரன், எல்.ஐ.சி. ரமேஷ், பிரேம் ஆனந்த், மு.ராஜதுரை, செ.கணேஷ், ராமலிங்கம், புதுநகர் குமார், எஸ்.எம்.ஏ. அறிவழகன், ஆர்.ரமேஷ், எஸ்.நாகராஜன், செ சுப்பிரமணி, எஸ்.செல்வம், எஸ். ராமச்சந்திரன், ஆ.முருகேசன், கே.எம்.எஸ்.குமார், கா இளங்கோவன், தட்சணாமூர்த்தி, முகம்மது ஆஷிப், முகம்மது ரபீக், க..செல்லையா., செ.இளங்கோவன், செல்வராஜ், ஆனந்த், சரவணன், நவீன் அண்டனி, அருண்குமார், ஆர்.எம். சத்யா, ஆறுமுகம், ரவிச்சந்திரன், சுப. கார்த்தி, கிருஷ்ணன், பாலு, மாரியப்பன், தியாகு, ராஜேந்திரன், வாஹித் அலி, கதிரேசன், பிரபு, அண்ணாத்துரை, அறிவுடை நம்பி, க.முத்துக் கருப்பன், சுரேஷ் குமார், விஜயக்குமார், கண்மணி சுப்பு மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கோவை வடக்கு - 86,79 வட்டம்

# பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## தொ.அ.ரவி பங்கேற்பு!

கோவை, ஆக. 29– கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கரும்புக்கடை பகுதிக்குட்பட்ட 86,79 வது வட்டக் கழகம் சார்பில், பொது உறுப்பினர் கூட்டம் கரும்புக்கடை பள்ளிவீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இக்கூட்டத்தில், கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தொ.அ.ரவி கலந்து கொண்டு வாழ்த்தி, சிறப்புரையாற்றி னார். கரும்புக்கடை பகுதிச் செயலாளர் ஜெய்லாப்தீன் முன்னிலையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் சோமு என்கிற சந்தோஷ், மாவட்ட துணைச்செயலாளர் ஜெயந்தி பொருளாளர் ரஹமான், வட்டக்கழக செயலாளர் இப்ராகீம் குத்புதீன் அணிகளின் அமைப்பாளர்கள் எ.எம். உசேன், தென்னை சிவா, தளபதி தியாகு, ஜாகீர் உசேன், சாதிக்பாட்ஷா, மாமன்ற உறுப்பினர் வசந்தாமணி பழனிச்சாமி, டி.எம்.அப்பாஸ், நவ்சாத், அஸ்ரப் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் BLA 2 வினர் கலந்து கொண்டனர்.

### நாகை மாவட்டத்தில்

# பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 1610 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## ஆர்.எஸ்.பாரதி-அமைச்சர் எஸ்.ரகுபதி - என்.கௌதமன் முன்னிலையில்

நாகை, ஆக. 29 - நாகை மாவட்ட கடலோர மீனவ கிராமங்களைச் சேர்ந்த 1610 மீனவர்கள் அ.தி.மு.க. வெற்றிக் கழகம், அ.ம.மு.க., தே.மு.தி.க., கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் விழா நாகை ஏ.எஸ்.ஏ. திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தலைமை தாங்கினார்.

நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து வரவேற்றார்.

விழாவில் மீனவ கிராமங்களான புஷ்பவனம் 120 பேர், வெள்ளப்பள்ளம் 110 பேர், வானவவன்மகாதேவி 230 பேர், விழுந்தமாவடி 50 பேர், காமேஸ்வரம் 55 பேர், செருதூர் 140 பேர், கல்லார் 25 பேர், அக்கரைப்பேட்டை 300 பேர், கிச்சாங்குப்பம் 120 பேர், சேவபாரதி10 பேர், நாகை ஆரியநாட்டுத்தெரு 110 பேர், நாகை நம்பியாநகர் 45 பேர், சாமந்தான் பேட்டை120 பேர், நாகூர் சம்பாத்தோட்டம் 95 பேர், மேலவாஞ்சூர், கிழபட்டினச்சேரி 90 பேர் என 1610 மீனவர்கள் அ.தி.மு.க. வெற்றிக் கழகம், அ.ம.மு.க., தே.மு.தி.க., கட்சிகளில் இருந்து விலகி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்தவர்களுக்கு இரு வண்ணகைத்தறி ஆடையை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஆகியோர் இரு வண்ண கைத்தறி ஆடையை அணிவித்து கழகத்தில் இணைத்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், செல்வ.செங்குட்டுவன், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நாகூர் நகரக் கழகச் செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் கோ.சி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, பாலமுரளி, தினேஷ், குலோத்துங்கன், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் கலையரசன், செல்வா, சுரோஷ், பிரதீப், மாவட்ட அறங்காலவர் குழு தலைவர் நாகலிங்கம்,

நாகை நகரக் நிர்வாகிகள் வெற்றிலைகடை சிவா, பி.திலகர், அபுபக்கர், சித்திரா குலோந்துங்கன் மற்றும் மீனவ கிராம கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் எஸ்.என்.மோகன்தாஸ், நன்றி கூறினார்.

மாற்றுக் கட்சியினர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசுகையில்

புதுப்புது கட்சிகள் தொடங்கும் போது அதில் போய் சேருவதாக செய்திகள் வருகிறது. இங்கே வந்து பார்க்கும் போதுதான் உண்மை தெரிகிறது. மீனவர்கள் அத்தனைபேரும் திராவிட முன்னேற்ற கழகத்தோடு தான் இருக்கிறார்கள் என்று மெய்பிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலன் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகு மிக பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேற்கு மாவட்டமான கொங்கு மண்டலத்தில் உள்ள ஒரு சமுதாயத்தினர் தி.மு.க. விற்கு ஓட்டு போட்டதே கிடையாது. ஆனால் இந்த நாடாளுமன்ற தேர்தலில் அந்த குறிப்பிட்ட சமுதாய மக்கள் முழுமையாக தி.மு.க.விற்கு ஓட்டு போட்டுள்ளனர்.

அதற்கு காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த 3 சதவித இட ஒதுக்கீட்டை வாதாடி பெற்று தந்ததான் இன்று நன்றி உணர்வோடு இருக்கிறார்கள். அதேப் போன்று எல்லா தரப்பு மக்களும் உள்ளனர். ரமேஸ்வரத்தில் மீனவர்களுக்காக நடைபெற்ற மீனவர்களுக்கான போராட்டத்திற்கு தலைமைக் கழகம் சார்பில் நான் சென்றிருந்தேன், அப்போது அங்கு கூடிய மீனவர்களை பார்த்தேன் அப்போது தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலினுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிந்தது. தற்போது வெளி வந்த கருத்து கணிப்பில் 2021 சட்ட மன்ற தேர்தலில் 5 மாநிலங்கள் 5 மாநிலங்களில் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றவர்களுக்கு மக்கள் மத்தியில் என்ன செல்வாக்கு இருக்கிறது என்று கருத்து கணிப்பு வெளியானது. அதில் தமிழ் நாட்டில் தளபதி மு.க. ஸ்டாலினுக்கு எவ்வளவு பேர் ஆதரவு இருகிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

அதில் 71 சதவீத மக்கள் தமிழ்நாடு முதமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதில் ஆட்சி 54 சதவிதம் மிகவும் திருத்திகரமாக மு.க.ஸ்டாலின் ஆட்சி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர். வரும் காலங்களில் கழகத்தினர் மீதமுள்ள 29 சதவீதத்தினரையும் இன்னும் எஞ்சியுள்ள ஒன்றை ஆண்டு காலத்தில் மாற்றும் பொறுப்பு உள்ளது. அதை நாம் அனைவரும் சேர்ந்து செய்த விட்டோம் என்றால் தி.மு.க.வை எந்த சக்தியாலும், எந்த கொம்பனாலும் தி.மு.க.வை தொட்டு பார்க்க முடியாது. யார் கட்சி ஆரம்பித்தாலும் கவலை இல்லை.

ஒரு அம்மாவசை, இரண்டு அம்மாவாசை தான் தாங்கும் அதற்கு மேல் தாங்காது. யார், யாரே கட்சி ஆரம்பித்துள்ளனர். அவர்கள் எல்லாம் எம்.ஜி.ஆர். ராக ஆகிய விட முடியாது. எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்தார்கள் என்றால் தி.மு.கவில் இருந்து போனார். ஒன்றாக இருந்து தி.மு.க.வை பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். தி.மு.க.வை பங்கே போட்டு கொண்டு போனார்.

புலியை பார்த்து பூனை சுட்டுக் கொண்டது போல கட்சி ஆரம்பிக்கிறவர்கள் எல்லாம் நாளைக்கே கோட்டைக்கு வந்து விடலாம் என்று நினைப்பு. கட்சி ஆரம்பித்த உடன் அங்கு போனால் பதவி வாங்கி விடலாம் என்று செல்கின்றனர். எந்த வேகத்தில் சென்றார்களோ அதே வேகத்தில் திரும்பி விடுவார்கள். காரணம் அது காலி பானை என்பதை இளைஞர்கள் புரிந்து கொண்டுள்ளனர். தி.மு.க. வில் கொள்கை உள்ளது.

இலட்சியம் உள்ளது. இந்த இயக்கம் தான் 75 ஆண்டு காலமாக தமிழ் நாட்டு மக்களிடத்தில் பணி யாற்றுகிறது. எந்த புயல் அடித்தாலும், எந்த சூறாவளி அடித்தாலும், எந்த சுனாமி வந்தாலும் சிக்காமல் உள்ள ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் என்பதை அதை உணர்ந்து நேற்று இவ்வளவு பேர் வந்துள்ளீர்கள் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. கழகத்தில் இணைந்தவர்களுக்கு கழகம் அரவனைப்பாக இருக்கும், கழகத்தலைவர் தளபதி அனைவருக்கும் பாதுகாவலராக இருப்பார்.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பராதி பேசினார்..

சரியான நேரத்தில் வர வேண்டிய இடத்திற்கு இப்போது வந்துள்ளீர்கள், இன்னும் பல பேர் தி.மு.க.வில் இணை விருப்பப்பட்டுள்ளனர். தி.மு.க. விற்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம். உங்களக்கு தி.மு.க. எப்போதும் பாதுகாப்பாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் கார்மெல் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், துணை செயலாளர் சுப்பு, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தம் சிவ.செந்தில்குமார், ஒன்றிய அவை தலைவர் ராசு, நகர்மன்றத் தலைவர் சூரியபிரகாஷ், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மகேஷ்குமார், மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) பக்தவத்சலம் உள்பட பலர் உள்ளனர்.

### ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் செயலாளர்

# கண்டோன்மெண்ட் சி.சண்முகம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஆக. 29 - ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டக் கழகச்செயலாளராகவும் ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், கண்டோன்மெண்ட் துணைத் தலைவராகவும் இருந்து திறம்பட மக்கள் பணியாற்றிய கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்கள் ( வயது 83) நேற்று முன்தினம் (27.08.2024) பிற்பகல் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

மறைவு செய்தியறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு :-

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் கழகத்தை வளர்த்தவர்களில் ஒருவராகத் திகழ்ந்த கண்டோன்மெண்ட் சி.சண்முகம் அவர்கள் நேற்று மறைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் துயருற்றேன்.

கலைஞர் மீது மிகுந்த பற்று கொண்டவராகத் திகழ்ந்த அவர் கழகத்தின் சார்பில் அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று முன்னின்று சிறை சென்றவர் ஆவார்.

காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்திற்கு என்று கலைஞர் பவள விழா மாளிகை கட்டி அதனை கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைத்தது இன்றும் பசுமையாக என் நினைவில் இருக்கின்றது.

கழகமே தனது மூச்சாக இறுதிவரை வாழ்ந்தவர் கண்டோன்மெண்ட் சண்முகம் அவர்கள் ஆவார்கள்! அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தஞ்சை மாவட்டம், பேராவூரணியில் செகந்திராபாத் – இராமேஸ்வரம் செல்லும் இரயில் பேராவூரணி இரயில் நிறுத்தத்தில் நின்று செல்ல வேண்டி தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலியிடம் கோரிக்கை வைத்தனர். மக்களின் நீண்டகால கோரிக்கையை ஒன்றிய இரயில்வே அமைச்சரையும், வாரியத்தலைவரையும் நேரில் சந்தித்து விரைந்து மக்கள் கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தியதில் செகந்திராபாத் – இராமேஷ்வரம் இரயில் பேராவூரணி இரயில் நிலையத்தில் நின்று சென்றதையடுத்து இரயில் ஓட்டுநருக்கு இனிப்பு வழங்கி வரவேற்றனர். இந்நிகழ்வில் ச.முரசொலி எம்.பி, என். அசோக்குமார் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.